வேத[illegible] வெளியீடு.

உ

சிவமயம்.

# "சாதியும் சமயமும்."


அச்சுவேலி

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

(வேதாகம சங்கத்தலைவர்.)

அவர்களாலும்,

கோவை

வழக்கறிஞரும், பெரியபுராண உரையாசிரியரும்,

சிவக்கவிமணியும் ஆகிய

ஸ்ரீமத். C. K. சுப்பிரமணியமுதலியார் B. A.

அவர்களாலும்


எழுதப்பெற்று,


ஷை வேதாகம சைவசித்தாந்த சபையாரால்

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1950.

# சாதியும் சமயமும்.

எவராயினும் தாம் அநுஷ்டித்து வரும் சமயத்திலே சாதியுண்டோ இன்றோ என்று ஆராய்ச்சிசெய்யத் தொடங்கு முன்னரே, தம்முடைய சமயத்தையும் அச்சமயப் பிரமாண சாஸ்திரங்களையும் இவைதாமென்று வரையறைப் படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். அவருக்கு அச்சமய சாஸ்திரங்களிலே அத்தியந்த விசுவாசமும் வேண்டப்படும். அதன் பின்னரேயே அவற்றில் சாதிப் பிரஸ்தாபம் உண்டோ இன்றோ என விசாரணை செய்தல் அவருக்கு முறையாம். தாம் மேற்கொண்ட ஆராய்ச்சியினாலே சாதியுண்டெனத் தோற்றுமாயின் அவர் தம்சாதி வரம்பில் நின்று கொண்டு தம்முடைய சமயத்தை அநுசரித்தல்வேண்டும். சாதி இல்லையெனத் தோற்றுமாயின் அவர் அதனை விடலாகும். அவருடையயோக்கியதைக்கு அழகு அதுவேயாம். அந்நியசமயங்களின் சகவாசதோஷத்தினாலும், இதுபோன்ற ஏனைய ஏதுக்களினாலும் வசமழிந்தவரே தம் சமய நூல்களிலுள்ள சாதிப்பிரஸ்தாபத்தை இல்லையென்று கூறத்துணிவர். அந்நூல்களை இகழ்ந்து கூறுவதும் அவருக்கொரு வேலையாகும். அவர் சமயத்தை இலக்காகக் கொள்ளாமையினால் சாதி பாஷை முதலியவற்றைப் புகலாகக் கொண்டு, சமய நூல்களை இகழுவாராயினர்.

பிறப்பிறப்பில்லாப்பெற்றியரும், அதிபரமாப்தருமாகிய சிவபெருமான் ஒருவரே பரமபதி என்றும் அவ்விறைவன் கருணைமேலீட்டினாலே திருவாய் மலர்ந்தருளிய இருக்காதி சதுர்வேதங்களும் காமிகாதி இருபத்தெட்டாகமங்களுமே பிரமாண சாஸ்திரங்களென்றும் அவ்விறைவனாரது அருள்பெற்று மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையவர்களாகிய உண்மைநாயன்மார்களால் அருளிச்செய்யப்பட்டமையின் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களும் பிரமாண நூல்களேயாமென்றும் விசுவசித்து ஒழுகுபவரே சைவர் எனப்படுவர். ஸ்ரீ ஞானசம்பந்தர் முதலிய பரமாசாரியர்களும், சந்தான குருமூர்த்திகளும் வேத சிவாகமங்கள் நமக்குப் பிரமாண நூல்கள் என்று நிலையிட்டருளினார்கள். 'தொகுத்தவ னருமறை யங்கமாகமம் வகுத்தவன்' என திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் 'ஆகமமாகிநின்றண்ணிப்பான் தாழ்வாழ்க' எனத் திருவாதவூரடிகளும் 'வேதமொடாகம மெய்யாமிறைவ னூல்—ஓதும்பொதுவும் சிறப்பு மென்றுன்னுக' எனத்

திருமூலரும் 'எண்ணி யாகம மியம்பிய இறைவர்தாம் விரும்பும் உண்மை யாவது பூசனை' எனச்சேக்கிழார்பெருமானும் 'வேத நூல் சைவநூல்என்றிரண்டே நூல்கள்' 'அருமறையாகம முதனூல்கள்' 'வேதாந்தத்தெளிவாம் சைவசித்தாந்தத்திறன்' எனச் சந்தான குரவர்களும் எடுத்துக் கூறியவாற்றானும் பிறவாற்றானும் வேதமும் ஆகமமும் சைவத்துக்கு முதனூலாய் இறைவன் வாக்காயுள்ள பிரமாண நூல்கள் என்பது துணியப்படும். ஆகவே எக்காரணம்பற்றியாவது இவை நமது முதனூல்கள் அல்ல ஆகமம் வேண்டாம் என்றொதுக்குவது பொருந்தாது. அங்ஙனம் சொல்வாராகில் சமயாசாரிய சந்தானசாரியர்களையும் சைவப் பெரியார்களையும் ஒதுக்கவேண்டியேற்படும். அப்போது நாம் பின்பற்றிஒழுக ஆசாரியர்களும் நூல்களும் இல்லாமலேபோய் விடும் என்பதை அறிந்து உண்மைகடைப்பிடிக்க. நமது நாட்டிலே புறச்சமய இருள் பரந்திருந்த காலத்தில் சமயஸ்தாபனஞ் செய்து சைவக்கொள்கைகளை நிலைநிறுத்தியவர் ஆறுமுகநாவலரேயென்பதை மறுப்பவர் ஒருவருமில்லை. அப் பெருந்தகையார் வேதாகமங்களே முழுமுதற் பிரமாண சாஸ்திரங்களென்று தம் பிரசாரங்களாலும் புத்தகங்களாலும் நிலைநிறுத்தியுள்ளார்கள்.

பண்டிதர்—வித்துவான்—சைவப்புலவர் என்னும் பட்டதாரியாகிய வேந்தனார் என்பவர், எங்கள் நாவலரைத் தழுவித் தழுவி அவருக்கு முற்றும்மாறாக ஆகமங்கள் எமக்கு வேண்டாமென்று போதனைசெய்து தீநெறிக்கட் செலுத்துவது இவரது சைவப்புலமைக்கே இழுக்காய் முடியும். நாவலரவர்கள் வேதாகமச் சிறப்புக்கூறிய இடங்கள் முழுவதையும் இங்கே எடுத்துக் காட்டப்புகின் மிகவிரியுமாதலின் அவற்றுட் சிலவற்றையே இங்கே காட்டுகின்றோம். இவற்றை வேந்தனார்கண்டு தெளிக.

1. இச்சாஸ்திரங்களெல்லாம் மூலபாஷையாகிய சம்ஸ்கிருதத்தில் உள்ளன. —சைவதூஷணபரிகாரம்.

2. வேதசிவாகமங்களிரண்டும் சிவபெருமானிடத்தே தோன்றினமையால் முதனூல் எனப்படும்.

—சைவசமய நெறியுரை.

3. சைவசமயிகளே! நீங்கள் பெறும் சமயதீக்ஷைமுதலிய தீக்ஷைகளையும் நீங்கள் அநுட்டிக்கும் சந்தியாவந்தனம் முதலிய கிரியைகளையும் உங்களுள் இறந்தவர்பொருட்டுச் செய்யப்படும் அந்தியேட்டி முதலிய கிரியைகளையும் நீங்கள் சேவிக்கும் தேவாலயங்களிற் கிரியைகளாகிய கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்

டாதி உற்சவாந்தம் உற்சவாதி பிராயச்சித்தாந்தம் என்னும் பரார்த்த கிரியைகளையும் விதித்த நூல்கள் சிவாகமங்களே........

—பெரியபுராணவசனம்.

நாவலர் பெருமானைப் பெரியவராக ஒப்புக்கொண்டு அவர் காட்டும் வேதாகமங்களை நமது சமயசாஸ்திரமல்ல வென்று ஒதுக்கும் அறிவிலிகள் தாயைக்கற்புக்கரசியாக ஒப்புக்கொண்டு அவள்காட்டும் தந்தையை விலக்கும் தனயரேயாவர். இக்காரணங்களாலே மேற்கூறப்பட்ட நூல்களை நம்பாதவர் சைவரென்று ஒருபோதும் சொல்லப்படமாட்டார்கள். இவைகளை விசுவசியாமல் இருந்துகொண்டு நாங்கள் சைவர் என்று சொல்லிக்கொள்வது முழுப்பொய்யும் அணைப்பு வார்த்தையுமாகும். அவர்கள் சைவசமயப் பிரசாரஞ்செய்ய முற்படுவது தகுதியன்று. அது விபரீதமாகவே முடியும்.

தற்காலத்திலே பரம்பரையாக அநுசரிக்கப்பட்டுவரும் சாதிபேதம்பற்றிப்பலவாறாகப் பேசிக்கொள்கிறார்கள். தேவாரம் திருமந்திரம் முதலியவைகள் சாதிநெறிபற்றிச் சொல்லவில்லையாதலால் சாதிபேதம் பார்த்தல் கூடாதுஎன்பர் சிலர். வேதாகமங்களிலே சாதியென்பது ஒன்றில்லை என்கிறார் வேறுசிலர். ஆகமங்களிலே பலவகைப்பட்ட சாதிகள் கூறியிருப்பினும், அவற்றைத் தமிழராகிய நாம் கொள்ளவேண்டியதில்லையென்று கூறுவர் இன்னுமொரு சிலர். பழந்தமிழருட் சாதிபேதமில்லையாதலால் சாதியை வேரோடு களைந்தெறியவேண்டுமென்று முழக்கம் செய்வர் மற்றொருசிலர். இன்னோரன்ன விதமாகச்சாதியில்லையென்று சாதிக்கத்தொடங்கி, தம்முள்மாறுபட்டுக் கூறியமையே அவர்கள் கொள்கை பிழையுடையதென்பதைக் காட்டும். சாதிபேதமுண்மையைப் பாரம்பரியம் நிலைநிறுத்துவதுபோலவே நஞ் சமயப்பிரமாண நூல்களும் வலியுறுத்துகின்றன.

சைவசமயி என்று தம்மைக் கொள்வோர் யாவராயினும் கன்மநெறியை உடன்படவேண்டும்; உடன்படவே சாதியையும் ஒப்புக்கொண்டவராவர். எதனால் எனில் கன்மமானது உயர்ந்த சாதி இழிந்தசாதி என்றும் பூரணஆயுள் குறைந்தஆயுள் என்றும் பெருகியபோகம் சுருங்கியபோகம் என்றும் மூன்று விதமாம் எனவும், பூர்வஜன்ம கன்மத்துக்கீடாகவே ஆன்மாக்கள் பிறவியைப் பொருந்துகின்றன எனவும் சிவப்பிரகாசமென்னும் சித்தாந்தசாஸ்திரம் செப்புகின்றமையினால் என்க.

சிவப்பிரகாசம்.

"கன்மநெறி திரிவிதநற்சாதியாயுட்போகக்கடனதெனவரு மூன்று முயிரொன்றிற் கலத்தல் தொன்மைய தூழல்ல துணவாகா" இன்னும் அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியாரிலே "பேறிழவின்பமோடு பிணிமூப்புச் சாக்காடென்னு மாறுமுன் கருவுட்பட்ட தவ்விதிய னுபவத்தாலேறிடும்"

எனக் கூறியிருப்பதும் இதற்குப் பிரமாணமாகும். ஆகையினாலே உயர்ந்த வருணத்திற் பிறப்பதும் இழிந்தவருணத்திற்பிறப்பதும் முற்கன்மத்தினாலாவதன்றிப் பூமியிற்பிறந்தபின் செய்து கொள்ளக் கூடியதன்று என்பது உணரப்படும். சித்தாந்த சாரா வளியிலும் அதன் வியாக்கியானத்திலும் ஆன்மாக்கட்குச் சரீரேந்திரிய விஷயங்கள் பலவிதயாகும் என்றும் கன்மம் புருடன் தோறும் ஜாதி ஆயுள்போகம் முதலானவற்றைத் தனித்தனியே ஏற்பாடு செய்துகொண்டு புவனவாசிகளுக்குப் புவனதார தம்மியத்துக்குத்தக்கபடி பலவிதங்களாய் ஆன்மாக்கள்தோறும் ஜன்மாந்தரங்களிலும் வரும் சரீரேந்திரிய விஷயங்களைக் கொடுக்க வல்லதாயிருக்கும்" என்றும் கூறப்பட்டது.

சிவஞானபோதத்தில் 'தவஞ்செய்தநற்சார்பில் வந்துதித்து' என மெய்கண்டதேவநாயனார் திருவாய் மலர்ந்தருளினார். இதற்குச் சிவஞானசுவாமிகள் வகுத்த சிற்றுரையில் 'தவஞ் செய்தற்குரிய உயர்ந்த குலத்தின்கண் வந்து தோன்றி' எனவும், நற்சாதியில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலென்ற அருத்தாபத்தியான் இழிகுலத்தோர் தத்துவஞானத்துக்குரியரல்லரென்பது பெறப்பட்டது எனவும் கூறப்பட்டிருக்கிறது. மானுடப் பிறவி எய்தினும் வேதாகமங்கள் ஓதப்படும் உத்தமதேசத்திலே பிறத்தல் மிகுந்த புண்ணியத்தால் உண்டாகும். உத்தமசாதியிலே பிறந்தும் புறச்சமயங்களிற் செல்லாதுநிற்கும் பேற்றினைப் பெறுதல் அதனினும் அரிதாம்.

நரர்பயி றேயக் தன்னி னுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா னுகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் கெல்லாப் பாக்கியம் பண்ணெ ணுதே.

என்று சிவஞானசித்தியாரிலே சொல்லப்பட்டது. இன்னும் சிவஞானசித்தியார் எட்டாஞ் சூத்திரத்தில் "இந்தப்பாரமேனுட்டிய நற்குலத்தினில் வந்தவதரித்து எனவும் செப்பப்பட்டிருக்கிறது. இத்திருவாக்குகளினலே உயர்குல இழிகுலங்கள்

உண்டு என்றும் இழிகுலத்தார் உண்மைச்சரியை கிரியை யோ கங்களாகிய அழிவற்ற தவஞ்செய்தற்குரியர் அல்லர் என்பது காண்க. இவ்வாற்றுனே சித்தாந்தநூல்களில் சாதிபேதம் உண் டென்று வற்புறுத்தியிருப்பதுகாண்க.

எவர்கள் இந்து கெட்டநடத்தையுடையவர்களோ அவர்கள் அடுத்தஜன்மத்தில் இழிந்தபிறப்பாகிய நாயாகவோ பன்றியாக வோ சண்டாளனுகவோ பிறக்கிறுர்களென்று சாந்தோக்கிய உபநிடதத்திலும், பக்ஷிகளின் கூட்டங்களை அடிப்பவர் உருவாயும் நாயடிக்கும்நிஷாதர் உருவாயும் இருக்கும் உங்கட்கும் அடிக்கடி நமஸ்காரம் என்று ஸ்ரீ உருக்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. நிஷாதர் சண்டாளர் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என் னும் நான்குவருணங்களும் என்னுலே குணங்கள் கர்மங்கள் ஆகிய பலவிதபாகத்தினுல் உண்டுபண்ணப் பட்டன என்றும், எவர்கள் நீசசன்மத்தை உடையவர்களோ, அவர்கள் தாமும் என்னை விசேஷமாகச் சேவித்து உத்தமமான பதவியை நிச்சய மாய் அடைகிறுர்களென்றும் பகவற்கீதை சொல்லும். இங்கே நான்கு வருணங்களும் வேறு வருணங்களும் கன்மத்தினுல் உண்டாகின்றன எனக் குறிப்பிட்டவாறு கண்டுகொள்க.

மேலும் சிவஞானபோத மாபாடிய கர்த்தர் சாதிகுலம் பிறப்பு முதலியவற்றுன் அபிமானஞ் செய்தற்கிடமாகிய இந்தத் தூலதேகம் என்றதும் காண்க.

இதுகாறும் காட்டிய சைவசித்தாந்த நூற்பிராமாணங்களா லும் பிறவாற்றுலும் "சொல்வனவல்லாற் பொருளில்லாத நல்ல குலம் தீயகுலத்தை நிலைநாட்டக் கனவிலும் நினைப்பார்களோ" என ஸ்ரீமத் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் கூறிய கூற்றே பொருளில்லாத வெறுஞ்சொற்களாயவாறுகண்டுதெளிக.

சாதிபேதம் சைவத்தில் இல்லையென்றும் நாவலரும் அத னைத் தெளிவாக விளக்குகிறுர்கள் என்றும் திரு. நவரத்தினம் என்பவர் எழுதுகிறுர். இதனைத் தமது சொந்தமுடிபென்று நீட் டிவிடின் குறைகூற இடமில்லை. தமது போலிமுடிபையே நாவல ரவர்கள் மீதேற்றி, வாசிப்போரை ஏமாற்ற முற்பட்டமையின் அஃது அவசியம் ஆராயப்படவேண்டியதேயாம். சாதிக்கட்டுப் பாடு இல்லையென்றவர் அவ்வளவோடமையாது ஆச்சிரமமும் இல்லையென்று கூறி, அப்போலிமுடிபையே ஆதாரமாகக்கொ ண்டு தீண்டாமை என்றதிலும் தொட்டுத் தமக்குத்துணையாக அருணந்திசிவாசாரியர், உமாபதிசிவாசாரியர், சிவாக்கிரயோகி கள் என்னும் அருளாளர்களையும் அகப்படுத்தி எழுதவுந் துணிந் தார்.

உயர்ந்த நான்கு வருணங்களும் அநுலோமர் முதலிய சங்கரசாதிகளுமுண்டென்ற பாகுபாடும், இன்ன இன்ன வருணத்தார் இன்ன இன்ன வருணத்தாருக்கு ஆசாரியராகலாம் என்ற நியமமும் பிறவுமாகிய அரும்பொருள்களை வடமொழிச் சிவஞானபோத பாஷ்யத்திலே சிவாக்கிரயோகியார் ஆகமபுராண மிருதிப் பிரமாணங்களால் நிலைநிறுத்தியிருப்பது கொண்டு, அவர் தமது கொள்கைக்குச் சிறிதும் சாதகமாகார் என்று திரு. நவரத்தினம் உணர்ந்துகொள்ளக்கடவர். மேலும், சிவாக்கிரயோகிகள் செய்தருளிய கிரியாதீபிகை, சைவசந்நியாசபத்ததி என்னுமிரண்டும் வருணமும் ஆச்சிரமமுமுண்டென்பதைத் துலக்கிக்காட்டும் கண்ணாடிகளாமென்பது முணர்க.

உமாபதிசிவாசாரியசுவாமிகள் தாம் பௌஷ்கராகமத்துக்குச் செய்தவிருத்தியில், பிராமணர்முதலிய நான்கு வருணங்களும் அநுலோமர் முதலிய சாதிகளுமுளவென்று அறிவுறுத்தியதோடு பிராமணர் முதலிய வருணத்தாருள் இன்னாரின்னார் ஆசாரியராகலாம் என்றும், நால்வகை ஆச்சிரமத்தாருக்கும் ஆசாரியக்கிரமம் இதுவென்றும், தீக்ஷைபெறுதற்கு யோக்கியர் இந்த இந்த வருணத்தாரென்றும், அருளிய பொருள்மொழிகளையும் வருணாச்சிரம பேதம்பற்றிக் கூறிய இன்னன பிறவற்றையும் கேட்டாயினும் அறிந்திருப்பரேல் உமாபதிசிவாசாரியர் தமது முடிபுக்கு உடன்பாடானவரென்று தீட்டத்துணியார்.

வருணம் ஆச்சிரமம் தீண்டாமை சைவசமயத்துக்கு அமையாதென்ற திரு. நவரத்தினம் நாவலரும் தமக்கு உடன்பாடானவரென்று தீட்டியதும், நாவலர் பெருமானது வச்சிரவசனங்களைப் பிரமாணமாகக் கொள்ளுவார் போலநடித்துத் தமது வசதிக்கேற்ப யூகஞ்செய்து கொண்டதும் நாவலப் பெருந்தகையார், சேக்கிழார் சுவாமிகளுக்கு மாறுபாடின்றித் திருநாளைப்போவார் சூசனத்தை எழுதினாரென்றும், அதுநாவலர் சொந்தக் கருத்தல்லஎன்றும் சமாதானம் சொல்லப்புறப்பட்டதும், அதுவாயிலாகச் சேக்கிழார்மீது அறியாமையேற்றியதும் பெருங்குற்றங்களாம். இங்ஙனம் உண்மைநூல்களை நிந்திப்பவர்களே, நாவலரவர்கள் உண்மைநாயன்மார் மகிமையிற் கூறிய ஸ்தானத்தில் முதலிடம் பெறுபவரென்றுணர்க.

வருணாச்சிரம தருமநெறியைத்தமது நூல்களில் பலவிதமாக நன்கு நிறுவியுள்ளார்கள். அவற்றுட் சிலவற்றை இங்கே காட்டுகின்றோம்.

1. பிராமணர் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருக்கும், க்ஷத்திரியர் க்ஷத்திரியர் முதலியமூன்று வருணத்தாருக்கும், வைசியர் வைசியர் முதலிய இரண்டு வருணத்தாருக்கும், சூத்திரர் சூத்திரருக்கும் சங்கரசாதியாருக்கும் ஆசாரியராகலாம். இந்நியமம் கிரியாகாண்டத்தின் மாத்திரமேயாம். ஞானகாண்டத்திலோவெனில் நான்கு வருணத்துள்ளும் உயர்ந்த வருணத்தாருக்குத்தாழ்ந்த வருணத்தார் ஆசாரியராகலாம்.

நான்குவருணத்தாரும் அநுலோமர் அறுவரும் ஆகிய பத்துச்சாதியாரும் ஔத்திரிதீக்ஷைபெறுதற்கு யோக்கியர். மற்றைச் சாதியார் ஔத்திரிதீக்ஷைக்கு யோக்கியர் அல்லர். ஔத்திரிதீக்ஷைக்கு அங்கமாகிய நயனதீக்ஷை, பரிசதீக்ஷை, வாசகதீக்ஷை மானசதீக்ஷை, சாத்திரதீக்ஷை யோகதீக்ஷை என்னும் ஆறனுள்ளும் தத்தம் சாதிக்கும் பரிபக்குவத்துக்கும் ஏற்றதீக்ஷை பெறுதற்கு யோக்கியர்.

(ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை)தத்தம் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் தீக்ஷைக்கும் ஏற்பக்குருமூகமாகவே பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பிராமணர்முதலிய நான்குவருணத்தாரும் அநுலோமர் அறுவருமாகிய பத்துச் சாதியாருள்ளும் அங்கவீனரல்லாதவர்கள் இட்டலிங்கபூசைக்கு அதிகாரிகள். —சைவவினாவிடை.

அநாதிமுத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே என்று துணிந்து அவர் அருளிச்செய்த வேதாகமங்களிலே விதித்தபடி தங்கள் தங்கள் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் ஏற்ப அவரை மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகளென்று சொல்லப்படுவர். —சிவாலயதரிசனவிதி.

சண்டாளருடைய நிழல்படினும், இழிந்தசாதியாரும் புறச்சமயிகளும் வியாதியாளரும் சனனமரண ஆசௌசமுடையவரும் நாய் கழுதை பன்றி கழுகு கோழி முதலியவைகளும் தீண்டினும்...........உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானம் செய்வது ஆவசியகம். —சைவவினாவிடை.

இதுகாறும் காட்டிய ஆறுமுக நாவலர் நூற்பிரமாணங்களாலே வருணம் ஆச்சிரமம் என்பவற்றிற்கேற்பவே தீக்ஷை சிவபூசை ஆலயவழிபாடு முதலியவைகள் விதித்திருப்பது செவ்விதிற்றுணியப்படும். ஆகவே சைவத்தில் வருணாச்சிரமபேதம் இல்லையென்ற கூற்று வெறும்பொய்யாயவாறு கண்டுகொள்க.

பெரியபுராணம் திருநாளைப் போவார் சூசனத்திற் கூறியிருப்பன நாவலப்பெருமானது சொந்தக்கொள்கையேயாமென்பது காட்டுவாம்.

நான்குவருணத்தாருக்கும் ஆகமத்தில் விதிக்கப்பட்ட தீக்ஷைக்கு அருகரல்லாத மற்றைச் சாதியார்கள் ஆசாரியரை அடைந்து தங்கள் தங்கள் அதிகாரத்துக்கேற்பத் திருநோக்கம் முதலிய தீக்ஷையைப்பெற்று .... தேவாலயத்தை வலஞ்செய்து வணங்குதலும் செய்வார்களாயின் பரகதி பெற்றுய்வார்களென்று நாலாம்பாலபாடம் வருணம் என்றபாடத்திலும், "திருக்கோயிலினுள்ளே போதற்கு யோக்கியர்கள் அல்லாதசாதியார்கள் திருக்கோயிற்புறத்திலே பிரதக்ஷிணம்பண்ணித் திருக்கோபுரத்தை நமஸ்கரித்துக் கடவுளைத்தோத்திரம் செய்யக்கடவர் என்று தேவாலயதரிசனம் என்னும்பாடத்திலும் சைவசமய நெறியுரைமுதலியவற்றிலும் ஆறுமுகநாவலர்கள் கூறியவாற்றானும், "மேலே சொல்லப்பட்டவைகளன்றிச் சிவாலயப்பணிகள் இன்னும் உள்ளனவா? உள்ளன........திருக்கோயிலினுள்ளே புகத்தகாதஇழிந்த சாதியாரும், புறச்சமயிகளும், ஆசாரமில்லாதவரும், வாயிலே வெற்றிலை பாக்கு உடையவரும், சட்டையிட்டுக்கொண்டவரும், தலையிலே வேட்டிகட்டிக் கொண்டவரும் உட்புகாவண்ணம் தடுத்தல் எனச்சைவவினாவிடையிற் செப்பியவாற்றானும் திருநாளைப்போவார் நாயனார் சூசனத்திற் கூறியதும் நாவலருடைய சொந்தக்கருத்தேயாகும் என்றும் துணிந்து கொள்க.

'சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறு மாதமிலி நாயேன்' 'கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்' என்னும் திருவாக்குகளைக்காட்டி சாதி பேதமில்லை; குல பேதமில்லை; கோத்திரபேதமில்லை என்பதே அவற்றின்பொருள் என்பர் சிலர். பண்டிதர் கா. பொ. இரத்தினமும் அக்கருத்துடையவரே. அவற்றின்பொருள் அதுதானாஎன்பது ஆராயப்படவேண்டியது. மேற்காட்டிய பிரமாணங்கொண்டு, சாதி குலம் கோத்திரம் முதலிய பேதமில்லை, அவைபற்றிய உயர்வுதாழ்வுகளுமில்லை என்று வாதாடுபவர்கள் 'தந்தையார் தாயாருடன் பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமாரே - வந்தவாறெங்ஙனே போமாறேதோ மாயமாமிதற்கேது மகிழவேண்டாம்' என்பதற்கும் தந்தை முதலிய முறைகளெல்லாம் பொய்; சைவத்தில் அம்முறை வேற்றுமையில்லை முறைகெட்டு நடக்கலாம் என்றுதானே அர்த்தம் பண்ணித் தொலையவேண்டும். திருமுறைகளாகிய சத்பிரமாணங்கட்குத் துரர்த்தம்செய்வது அடாது! அச்சுருதியின் மெய்ப்பொருள் தான் என்னையெனில்; தாய் முதலிய பொருள்கள் உள்பொருள்களே; அவைகளைமதித்தே ஒழுகவேண்டும். அதனாற்

பலநலன்கள் பலனாக வரும்; ஆனால் அந்நலன்கள் நிலைபுடையனவல்ல; சிவபெருமானை அடைவதால் வரும் நலனே நிலைபேறுடையது. சிவபிரானாரை அடையும் முறையில் அம்முறைப்பற்றுச் சிலசமயங்களிற் குறுக்கிடலாம். அப்பொழுது அவற்றைப் பந்தமெனவிடவேண்டும்' என்பதேயாம். அப்பற்றை விடுதலால் முறைமாறிநடஎன்பது தாற்பரியமாகாது. அப்படியே "சாதி குலம்...." "கோத்திரமும்...." என்னும் அருள்வாக்குகளின் பொருளுமாம்.

இவ்வருள்வாக்குகள் முறுகிவளர்ந்த அன்பு மேலிட்டவிடத்தும் ஞானநிட்டை கைவரப்பெற்றவிடத்தும் சாதி குல கோத்திரங்கள் முன்னிற்கா எனக்கூறியதேயன்றி, சாதி குலகோத்திரங்கள் உண்டென்போரை இழித்துக் கூறவந்தசெய்யுட்கள் அல்லவென்று உணரவேண்டும். எதனாலெனில் 'குலம்போல்வேன்' என அப்பமூர்த்திகளும், 'குலமவராகக் குலம் இவருமாக' 'சாதியால் மிக்கசீரால் தகுவார்தொழுஞ் சாத்தமங்கை' எனத் திருஞானசம்பந்த சுவாமிகளும் சாதியைச்சிறப்பித்துக் கூறியவாற்றான் அறியப்படும். மேலும்,

1. மறையவ னறிவுற் றெழுந்து
மனமிகக் கூசி வைகறைக் குளித்துத்
தான் முன் செய்வதோர்
பொற்புடைப் பூசனை புகழ்தரச் செய்து

எனத் திருக்கண்ணப்பதேவர் திருமறத்திலும்,

2. 'மறைபயில்வர்......நான்முகனே யன்னசீர் நானூற் றுவர்மறையோர்' என ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையிலும்,

3. அங்கமோரா றவையும் மருமாமறை வேள்விகளும்
எங்குமிருந் தந்தணர் எரிமூன்றவை யோம்புமிடம்
..............................நணிபள்ளியதே.

4. தென்னர் சேரர் சோழர்கள் தாம்வணங்கும்..................
..........................திருப்பூவணமே.

5. வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாள ராக்கூறிற் றான்றோன்றி மாடமே.

6. களைத்தமேதி காணாதாயன் கைம்மேற் குழல்ஊத
அனைத்துஞ் சென்றுதிர ளுஞ்சாரல் அண்ணாமலை.

7. கடல்வாழ் பரதர் மனைக்கே நுனைமூக்கின் சங்கமேறி முத்தமீனும் சண்பை.

8. வெஞ்சொற்பேசும் வேடர்மடவார் எனத் தேவாரத் திருமுறையிலும், 'சாதியும் வேதியன்' 'விருப்புற்று வேடனார்' எனத் திருவாசகத்திலும், அந்தணர்முதலிய வருணங்கள் சொல்

லப்பட்டிருத்தல் அறிக. இங்கே அந்தணர்க்கு வேதமோதுதல் முதலியவற்றை யுரியனவாகக்கொண்டு கூறியதும், வேளாளர்களை ஈதலிற் பெருங்கீர்த்தியுடையரென்று கூறியதும் பிறவும் நோக்குக. சேக்கிழார்சுவாமிகள் சிவபாதவிருதயருடைய பெருமையைவிளக்குவாராய்,

"அப்பதியி னந்தணர்தங் குடிமுதல்வ ராசின்மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத விருதயரென்
றிப்புவிவா ழத்தவஞ்செ யியல்பினு ருளாரானார்."

என அவரை அந்தணர் குலத்தவரென்றும் கவுணிய கோத்திரத்தினரென்றும், சண்டேசுரநாயனார் புராணத்தில், இந்தநாயனாருடைய திருவவதாரச் சிறப்பைக் கூறத்தொடங்கி, 'பெருமை பிறங்கு மப்பதியின் மறையோர் தம்முட் பெருமனைவாழ்— தரும நிலவு காசிபகோத்திரத்துத் தலைமைசான்மரபில்' ........'எச்சதத்தன் உளனானான்' என எச்சதத்தன் வேதியர்குலத்தவனென்றும். கிருகஸ்த ஆச்சிரமத்தினனென்றும், காசிபகோத்திரத்தினனென்றும் அருளியிருத்தல் காண்க. இவ்வாற்றால், வருணம் ஆச்சிரமம் கோத்திரம் முதலியவை பற்றியபேச்சுத் திருமுறைகளில் இல்லையென்று சொல்வது சிறிதும் பொருந்தாதென்பது காட்டப்பட்டது.

'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்று வேதாகமங்களை நன்குணர்ந்த திருமூலரே கூறியிருக்கிறார். இதனையேற்றுக்கொள்ளுஞ் சைவர்கள் நல்லகுலம் தீயகுலத்தை நிலைநாட்டக்கனவிலும் நினைப்பார்களோ" என்று தம் கருத்துக்கிசைந்தவாறு போதிக்கிறார் பண்டிதர் திரு இரத்தினம் அவர்கள்.

நன்னூலில் நல்லாசிரியனிலக்கணம் சொல்லிய விடத்தில் வரும் 'குலனரு டெய்வங் கொள்கை மேன்மை' என்றசூத்திரத்தையும், "உயர்குடிப்பிறப்புஞ் சீவகாருண்ணியமுங் கடவுள் வழிபாடுமாகிய இவைகளால் எய்திய மேன்மையும்—" என்ற உரையையும், பெயரியல் கசு-ம் சூத்திரஉரையில் அந்தணன் வேளாளன்என்பன சாதியால்வருபெயர்எனவருவதையும் மறந்துபோய் மேற்கண்டவாறு சொல்லிவிட்டார் என்செய்யலாம்.

1. மறையவ ரர்ச்சனை வண்படி கந்தான்
இறையவ ரர்ச்சனை யேய பொன்னாகும்
குறைவிலா வயிசியர்க் குக்கோ மளமாந்
துறையுடை சூத்திரர் தொல்வாண லிங்கமே.
2. அந்தண ராவோ ரறுதொழில் பூண்டுளோர்
3. பேர்கொண்ட பார்ப்பான்

என்னும் செய்யுட்களும் அத்திருமந்திரத்தில் உள்ளனவன்றே! இங்கே அந்தணர் அரசர் வைசியர் சூத்திரர் என்னும் நான்கு வருணமுங் கூறப்பட்டுள்ளனவன்றே! 'ஒன்றே குலனும்' என்பதற்குச் சாதிவேற்றுமையில்லையென்று பொருள்கண்டால் அத்திருமந்திரத்தில் நான்கு வருணங்களையுங்கூறிய பகுதிகளின்கதி யாதாய்முடியும், முன்பின் மாறுபடாது பொருள்கொள்வதன்றே பொருத்தம். ஆதலினாலே அத்திருமந்திரத்துக்கு மெய்ப்பொருள்யாதெனில் கூறுவாம். 'ஒருவனே தெய்வம்' என்பது அழிவில்லாத பரம்பொருளையும் 'ஒன்றேகுலன்' என்பது சீவர்களெல்லாம் அப்பரம்பொருளின் அடிமைக்குடி என்பதையும் குறிக்கும் என்பதாம். இனிநான்கு வருணத்தாருக்குமுரிய சிவலிங்கபரிமாணம் சைவசமயநெறியிற் சொல்லப்பட்டுள்ளது. ஆங்கே நாவலர் எழுதிய உரையை மாத்திரம் காட்டுகின்றேம்.

அஃதாவது:- பன்னிரண்டும் பதினொன்றும் பத்துமாகிய மூவிதவங்குலவுயரத்தையுடைய இலிங்கம் நிலைபெற்ற பிராமணர்க்குரியதாம். ஒன்பதும் எட்டும் ஏழுமாகிய மூவகையங்குலவுயரத்தையுடைய இலிங்கம் அரசர்க்குரித்தாகும். ஆறும் ஐந்தும் நான்குமாகிய மூவகையங்குல வுயரத்தையுடைய இலிங்கம் வைசியர்க்கு உரித்தாம். மூன்றும் இரண்டும் ஒன்றுமாகிய மூவகையங்குலவுயரத்தையுடைய இலிங்கம் சூத்திரருக்கு உரித்தாம்' என்பதாம்.

ஆகவே, மேலே கண்டதிருமந்திரப்பகுதிக்குக் குலபேதமில்லை யென்று பண்டிதர் திரு இரத்தினம் (**B. O. L.**) பொருள் கண்டது பொருந்தாதென்பது துணியப்பட்டது.

உமாபதிசிவாசாரியராலும் துதிக்கப்பெற்றவரும், முதன் மந்திரியாயிருந்து லௌகிகத்தன்மையினும் முற்றுந்தேர்ந்தவரும், தொண்டைநாட்டுவேளாள குலபதியுமாகிய சேக்கிழார் சுவாமிகளாற் செய்யப்பட்ட பெரியபுராணம் சைவத்துக்குக் கண் போன்றது. இப்பெரியபுராணத்திலே பிராமணர் முதற் புலையரீறாகிய சாதிகள் சொல்லப்பட்டுள்ளன. இன்னும் அப்புராணத்திலே,

'இன்னல்தரும் இழிபிறவி யிதுதடையென் றேதுயிலார்
அந்நிலைமை அம்பலத்துள் ஆடுவா ரறிந்தருளி' எனவும்,

'கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்படுவித்
தேயுமிசை யாழுங்க ளிறைவருக்கிங் கியற்றுமென'

எனவும் வரும் சாதிபேதம்கூறிய செய்யுட்களையும் அப்பெரியபுராணத்திற் கண்ணுறலாமே. மேலும் வேதாகம சாஸ்திரங்களிலும் இதிகாசபுராணங்களிலும் தேவாராதி திருமுறைகளிலும் சித்தாந்த நூல்களிலும் வருணநெறிப்பற்றிய பகுதிகளைப் பார்க்க

லாமே. அன்றியும் வருணச்சிரமபேதம்பற்றியுள்ள விதிகளை நாவலர் எழுதிய சைவவினாவிடை முதலியவற்றிலும் உணரலாமே! மெய்ப்புலவர்களால் உச்சிமேற்கொள்ளப்படும் கந்தபுராணத்தில்,

"தலத்திடை வேறிடத் தொதுங்குந் தண்ணிய
குலத்திடைப் பிறந்தவர் கூட்ட மாமென" (தண்ணியகுலம்-இழிந்தகுலம்) எனவருவதையும் நோக்கலாமே. இன்னும் சங்கநூல் ஆதிய பலநூல்களிலும் இன்னோரன்ன சாதிநெறி பற்றியபாக்களைக் கண்டுகொள்ளலாமே. இப்படியெல்லாமிருப்பவும் சாதிபேத முண்டென்பவர்களைப் போலிச்சைவரென்றும், வெறிபிடித்தவரென்றும் பண்டிதர் இரத்தினம் புகலுவதின் பொருள் என்னை? முழுப்பூசினிக்காயை வட்டில் சோற்றில் மறைத்து உலகைஏமாற்ற முடியுமா?

மேலும், பண்டிதர் இரத்தினமவர்கள் "ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும்........கடவுளாரே" என்னும் தேவாரத்தைத் தமக்குப் பிரமாணமென்றெடுத்தார். அத்தேவாரமே புலையரென்றொரு சாதியுண்டென்றும், அது மிக இழிந்த சாதியென்றும் காட்டுகின்றது. புலையரேனும் என்ற இழிவுசிறப்பும்மையானும், அன்பராகில் என்ற எச்சத்தானும், இன்மையையும் ஏகதேசத்தையும் விளக்கியதன்றி, சாதிவேற்றுமையில்லையென்றும் இழிந்தோர் அனைவரையும் ஆலயத்துள் நுழைவிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டதன்றென ஓர்க. மேலேகாட்டிய தேவாரத்தைப் பிரமாணமாகக்கொண்டமையின் புலையரென்றொருசாதி உண்டென்பதையும் அங்கீகரித்துச் தாமும் தாம் குறித்தசைவரேயானார்.

கொக்குவில் திரு. வே. விசுவலிங்கம் என்பவர் பழந்தமிழருக்குள் சாதிவேற்றுமை இருந்திருக்கவில்லை என்றார். அதனை ஆராய்ந்து உண்மைகாட்டுவாம்.

தொல்காப்பியனார் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நாற்பாற்குலத்தினருடைய மரபுமுறையைத் தம்மரபியலிற் கூறப்புகுந்து முதற்கண்,

நூலே கரகம் முக்கோல் மனையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய

என அந்தணகுலத்துக்குரிய மரபுமுறை கூறுவர். நூல் என்பதற்கு முந்நூல் எனப் பேராசிரியர் உரைகண்டார், நூலினைமுறற்கூறினான் பிறப்புமுறையானும் சிறப்புமுறையானும் என்பதுவெனவிசேடவுரையிற் கூறினர். பிறப்புமுறை - துவிஜன் என்னும் பிறப்பைக்காட்டுமுறை, சிறப்புமுறை - ஏனையவற்றிலும் நூல் சிறந்ததாகியமுறை. மற்றைய குலத்தாருக்குரிய மரபுமுறைஅடுத்துவரும் சூத்திரங்களாலே கூறுவர்.

அரசர்க்குரியன:—

படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாருமுடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய

வணிகர்க்குரியன:—

வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை

வேளாளர்க்கு உழவுதொழில்:—

வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லெனா மொழிப பிறவகை நிகழ்ச்சி

எனவருவனவும் பிறவுங்கண்டுகொள்க. பன்னிருபாட்டியல் ஆசிரியரும்,

பார்ப்பா ராசர் வணிகர் வேளாளரெனப்
பாற்படு நாற் பெயர் குலப்பெயராகும்

என்பதனாற் குலம் நான்கெனக் கூறினர். நம்சிவபெருமானையும் அந்தணனென்று குறித்தமையானன்றே, 'விரிநூல் திகழ்மார்பினர்' 'வேதமோதி வெண்ணூல்பூண்டு' என்று நமது தமிழ்த்திருமுறையிற் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியச் சூத்திரத்தினுள்ளும் அந்தணர்க்குரியது நூலெனச் சொற்றமையினாலன்றே சுஞ்சீகாழிப்பிள்ளையாரும் அந்தணர்குலத் தோன்றலாதலால்,

ஒல்லைமுறை யுபநயனப் பருவமெய்த வுலகிறந்த சிவஞான முணரப்
பெற்றூர், தொல்லைமுறை விதிச்சடங்கு மறையோர் செய்யத் தோலொடு
நூலணிந்தனர் சுரர்கள் போற்ற.

எனச்சேக்கிழார் பெருமானும் அருளிச்செய்தார்.

மேலும், புறநானூற்றில்

1. ஒன்று புரிந் தடங்கிய விருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்றவெண் குடைக் கொடித்தேர் வேந்திர்

2. ஏற்ற பார்ப்பார்க் கீரங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து

3. நன்பல - கேள்வி முற்றிய வேள்வி
யந்தணர்க் கருங்கல நீரொடு சிதறி எனவும்,

பட்டினப்பாலையில்,

4. நான் மறையோர் புகழ் பரப்பியும் எனவும்,

சிறுபாணாற்றுப்படையில்,

5. பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவி னந்தணர்க் காயினும்

பெரும் பாணாற்றுப்படையில்,

6. கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ

7. மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
[மனைகளிலே தங்குங் கோழிகளுடனே நாயுஞ் சேராதல்]
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
[வளைந்த வாயினையுடைய கிளிக்கு வேதத்தின்ஓசையைக் கற்பிக்கும்]
எனவும்,

(பரிபாடலில்)

8. அறத்தொடு வேதம் புணர்தவ முற்றி
விறற்புகழ் நிற்ப விளங்கிய கேள்வித்
திறத்திற் றிரிவில்லா வந்தண ரீண்டி
யறத்திற் றிரியாப் பதி.

எனவும், வருவனவும் பிறவும் கண்டுகொள்க.

இங்கே அந்தணர் இருபிறப்பாளர் என்பதும் அவருக்கு வேதமுரிய தென்பதும், அவருக்கு ஏற்றல் உரியதென்பதும், அவருடைய இல்லங்களிலே நாய் கோழி தங்குவதில்லை என்பதும் பிறவும் கூறப்பட்டுள்ளன. இனி,

(குறிஞ்சிப்பாட்டில்.)

மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும். எனவும்,

(திரிகடுகத்தில்.)

கழகத்தால் வந்தபொருள்கா முறுமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போ லொழுக
லுழவின்கட் காமுற்று வாழ்தலிம் மூன்று
மழகென்ப வேளாண்குடிக்கு. எனவும் வருவனமுறையே
வணிகரையும் குறிப்பனவாமென்றுணர்க.

( தச்சர் முதலியோர் )

1. தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
யூரா நற்றே ருருட்டிய புதல்வர்.
எனப் பெரும்பாணாற்றுப்படையினும்.

2. வைகல் — எண்டேர் செய்யுந் தச்சன்.

3. வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே. எனப் புறநானூற்றிலும்.

4. கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர். என மதுரைக் காஞ்சியிலும்.

புலையர் முதலியோர்.

5. துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை.

6. துடியெறியும் புலைய

7. இழிபிறப் பாளன் கருங்கை சிவப்ப
வலி துரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி எனப் புறநா

னூற்றிலும்,

8. கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய
மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லில்

[குடிச்செல்வரென்றார் நான்கு வருணத்தை; பிறரென்றார் அவர் களாற்றோன்றிய வனைச்சாதிகளை] என மதுரைக்காஞ்சியிலும் வரும் பகுதிகளும், இவ்வாறே சிலப்பதிகாரம் முதலிய நூல் களுள் வரும்பகுதிகளும் பலவகைச் சாதிகள் உண்டெனக் காட்டுகின்றன.

இதுவரையுங்காட்டிய தொல்காப்பியம் புறநானூறு பரிபா டல் முதலிய பழந்தமிழ்நூற் பிரமாணங்களாலே சாதிவேற்று மையுண்டென்று நன்கு நிறுவப்பட்டது. இதனை திரு. வே. விசு வலிங்கம் அவர்கள் செவ்வனே மனதிற்பதித்து உண்மைநெறி யடைப்பிடிக்க மேலும் சில காட்டுவாம்.

ஒழுக்கமுடைமை கூறும் அதிகாரத்தில் பொய்யாமொழியார் 'மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான் —பிறப்பொழுக் கங் குன்றக் கெடும்' என்றமையால் பிறப்பினாற் பார்ப்பானென்ன று பெயரெய்தியவனையே இங்குக் குறித்ததென்பது தானே போ தரும். மேலும், பார்ப்பான் என்ற பதத்துடன் பிறப்பு என்ற பதத்தைச் சேர்த்திருப்பதால் அந்தப் பார்ப்பான் பிறப்பினாற்பெய ரெய்தியவனென்பது பெறப்படும். பார்ப்பான் பிறப்பு. அந்தண னது உயர்ந்தவருணம் என்பர் பரிமேலழகர். நான்மணிக்கடிகை நூலாசிரியர் 'அந்தணரி னல்ல பிறப்பில்லை' என்றதுங் காண்க. இனி அவனுக்குரிய ஓத்து இதுவென விசாரிக்குங்கால், அது வேதம் எனப்படும். ஓத்து எனப்படும் வேதம் மறையோருக்கு உரியதாதலினன்றே, திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்தாரொருவர் 'செய்யாஅதற்குரியர் அந்தணர்' என்றார். செய்யா அது—வேதம். இதனால் அந்தணரென்பது, பிராமணரைக் குறிப்பது காண்க. 'இனி அந்தணரென்போர் அறவோர்' என் னுங் குறட்பாவைக் காட்டி அந்தணரென்பது நல்லருளுடை யோரைக் குறிக்குமேயன்றி, பிராமணசாதியைக் குறியாது என்பர் திரு. வே. விசுவலிங்கம் அவர்கள். அந்தணன்என்னும் சொல் நீத்தார் பெருமையிற் கூறப்பட்டது உண்மையே. கட வுள் வாழ்த்தில் இறைவர்க்குரிய பெயராகவுங் கூறப்பட்டுள் ளது. செங்கோன்மை என்னும் அதிகாரத்தில்,

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்

என்னும் குறள் காணப்படுகின்றது. அந்தணர் நூற்கும் என்னும் சொற்றொடருக்கு அந்தணர்க்குரியதாகிய வேதத்திற்கும் எனப் பொருள் கண்டார் பரிமேலழகர். விசேடவுரையில் 'அரசர் வணிகரென்னுமேனையோர்க்கு முரித்தாயினும், தலைமை பற்றி அந்தணர் நூலென்றார்' எனவுமுரைத்தார். புறநானூறு ருகூஎ-வது செய்யுளில், 'அறுதொழிலந்தணர்' எனச் சொல்லப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்து மூன்றும் பத்தில் 'ஓதல் வேட்டல் அவை பிறர்ச்செய்தல்—ஈதலேற்றலென்றாறு புரிந்தொழுகும் அறம்புரியந்தணர்' என்பதனால் அவ்வாறுதொழில் இன்னவையென விளங்கும். 'அந்தணரென்போர் அறுதொழில் பூண்டுள்ளோர்' எனத் திருமூலநாயனார் திருவாய் மலர்ந்தருளியது முன்னும் காட்டப்பட்டது.

இவ்வாறே சுப்பிரபேதம்முதலிய சைவாகமங்களும் கூறும். மிருதிகாரரும் அவ்வாறே ஓதினர். ஆறுமுகநாவலர் பெருமான் "பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் என நான்கு வருணமுண்டென்றும், சூத்திரர், சற்சூத்திரர் அசற்சூத்திரர் என இருபிரிவினர் என்றும், சற்சூத்திரர் வைசியரோடொப்பர் என்றும், பிராமணருக்குரிய தொழில்கள் வேதமோதலும் வேதமோதுவித்தலும், யாகஞ்செய்தலும் யாகஞ் செய்வித்தலும், தானங் கொடுத்தலும் தானமேற்றலுமாகிய ஆறுமாம் என்றும் பாலபாடத்திற் கூறினர். 'கேள்வியந்தணர் கடவும் வேள்வி' 'ஓத்துடையந்தணன் எரிவலஞ்செய்வான் போல்' எனவரும் கலித்தொகை அடிகளும் வேதமும் வேள்வியுமுடையாராகிய பிராமணரையே குறிப்பதாமென்றுணர்க. அந்தணர் என்பதற்கு வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார் என்று திருமுருகாற்றுப்படையில் நச்சினார்க்கினியார் பொருள் கூறுவர் 'அந்தண்மைபூண்ட அருமறை அந்தத்துச்—சிந்தைசெயந்தணர்' என்ற திருமந்திரக் கருத்துக்கொண்டே அங்ஙனம் பொருளெழுதப்பட்டதென உணரலாகும். திருமந்திரத்தில் அந்தணரென்ற சொற்கு அழகிய தண்மை பூண்டவரென்றும், வேதாந்தத்தைச் சிந்தை செய்பவரென்றும் இரண்டு பொருளும் கொள்ளப்பட்டிருத்தல் காண்க. ஆகவே அந்தணன் என்னும் மொழி இறைவனுக்கும், நாற்குலத்தினுமுயர்ந்த மேற்குலத்தாருக்கும், முற்றத்துறந்தமுனிவருக்கும் வழங்கப்படுமாறு கண்டு கொள்ளக்கடவர்.

பண்டிதர் இரத்தினம் அவர்கள் பிறப்பினால் மாத்திரமன்று ஒழுக்கத்தினாலும் உயர்வுதாழ்வு ஏற்படுகிறதென்றார். அதனை நாமும் ஏற்றுக்கொள்ளுகிறோம். தத்தம் வருணத்துக்கும் நிலைக்கும் விதிக்கப்பட்ட பிரகாரம் நடப்பதே ஒழுக்கமாம். அங்ஙன

மே பரிமேலழகரும் கூறுவர். ஒவ்வொருவருணத்தாரும் தங்கள் தங்கள் சாதிக்குரிய ஒழுக்கத்தைப்பாதுகாத்தே வரல்வேண்டும். நமிநந்தியடிகள் நாயனார் தீண்டத்தகாதவரைத் தீண்டியபடியால் ஸ்நானஞ்செய்து வீட்டினுட்போய்ச் சந்தியாவந்தனம் முதலிய வற்றைச் செய்யவேண்டுமென்று சொன்னாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. திருநாளைப்போவார் நாயனார் திருக்கோயிலினுள்ளேபோகாது நின்றதும் சாதி நெறிகடத்தல் தகாது என்னும் ஒழுக்கம் பற்றியேயாம். அதுபற்றியே ஒவ்வொரு வருணத்தாரும் தத்தமக்கு விதிக்கப்பட்ட தானங்களில் நின்று வழிபடுகிறார்கள். அவ்விதியை மாற்றத்தூண்டும் துணிவு, ஒவ்வொருசாதியாருக்கும் விதித்த ஒழுக்கத்தை அழிக்கும் தீச்செயலேயாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், "சிவப்பிராமணர்கள் கர்ப்பக் கிருகத்திலும், பிராமணர்கள் அர்த்தமண்டபத்திலும், க்ஷத்திரியர் மகாமண்டபத்திலும் புகுந்து சிவமூலமந்திரத்தினாலே புஷ்பாஞ்சலி செய்யக்கடவர். வைசியர் இடபத்துக்கு முன்னும் சூத்திரர் இடபத்துக்குப் பின்னும் கோமயத்தினாலே சதுரச்சிரமாக இடம்பண்ணி சிவமூலமந்திரத்தினாலே அருச்சிக்கக்கடவர்" என்று சிவாலயதரிசனவிதியிலும்,

"திருக்கோயிலினுள்ளே போதற்கு யோக்கியர்கள் அல்லாத சாதியார்கள் திருக்கோயிற் புறத்திலே பிரதக்ஷிணம் பண்ணித் திருக்கோபுரத்தை நமஸ்கரித்துக் கடவுளைத் தோத்திரஞ் செய்யக்கடவர்கள்" என்று பாலபாடத்திலும்,

"திருக்கோயிலினுள்ளே புகத்தகாத இழிந்தசாதியாரும் புறச்சமயிகளும் உட்புகாவண்ணம் தடுத்தல் சிவாலயப் பணிகள்" என்றும் நாவலர் கூறியிருக்கிறார்கள். ஆனால் பண்டிதர் இரத்தினம் அவர்கள் தாம் நாவலப்பெருந்தகையாரைப் பின்பற்றி யெழுதுவதாகக் காட்டிக்கொண்டு என்னசொல்லுகிறார். "தாழ்த்தப்பட்டசாதியினர் கோயிலுக்குட் புகுதல் கூடாது எனும் ஆரவாரம் அறியாமையாலும் இறுமாப்பாலும் ஏற்படுவதேயாம்"என்றார். நாவலரவர்கள் சிவபுண்ணியமாகக்கொண்ட செயல் பண்டிதருள்ளத்துக்கு அறியாமையும் இறுமாப்புமான செயலாக முடிந்துவிட்டது.

'சாதியினும் சமயமே அதிகம்' என்னும் நாவலர்பெருமானுடைய பொன்மொழி சைவசமயிகளுக்குச் சாதியுண்டென்பதைச் சிறிதேனும் மறுக்கவில்லை. நாவலரவர்கள் எழுதிய "விதிமார்க்கம் பத்திமார்க்கம்" 'சாதியினும் சமயமே அதிகம்' என்பதூற்றின் விளக்கம் பின்னர் வெளிவரும். நாவலரவர்கள் நான்

கரம் பாலபாடம் வருணம் என்னும் பாடத்திலும் சைவசமய நெறியுரையிலும் நான்குவருணத்தாருடைய தோற்றமும் தொழிலும், அநுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விராத்தியர்களுடைய தோற்றம் முதலியவைகளும் உரைத்துள்ளார்கள். சுப்பிரபேதம் முதலிய சைவாகமங்களும் பத்ததிகளும் இவற்றிற்குப் பிரமாணமாயிருக்கின்றன. இன்னும் சைவர்கள் சாதிபேதத்தினாலே ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்தியசைவர் என அறுவகைப்படுவர்கள் என்றும் நாவலர் கூறுகிருர்கள் (ஆதிசைவர்-சிவப்பிராமணர், மகாசைவர் - வைதிகப்பிராமணருள்ளே சிவதீக்ஷைபெற்றவர், அநுசைவர் - சிவதீக்ஷைபெற்ற க்ஷத்திரியரும் வைசியரும், அவாந்தரசைவர் - சிவதீக்ஷைபெற்ற சூத்திரர். பிரவரசைவர் - சிவதீக்ஷைபெற்ற அநுலோமர், அந்தியசைவர் -சிவதீக்ஷைபெற்ற பிரதிலோமர் முதலியோர்.

1. திருநந்தனவனத்தை புலையர், புறச்சமயிகள், தூரஸ்திரீகள் முதலாயினோர் உள்ளேபுகாமலும்....பாதுகாத்தல்வேண்டும்.

2. கடவுட்பூசைக்குப் பத்திரபுஷ்பம் எடுக்க யோக்கியர் ஆகாதவர் தாழ்ந்தசாதியார், அதீக்ஷிதர், ஆசௌசமுடையவர், நித்தியகருமம் விடுத்தவர், ஸ்நானம் செய்யாதவர், தூர்த்தர் முதலானவர்.

3. தீண்டத்தகாத சாதியாரையும், புலாலுண்பவரையும், அசுத்தரையும், சனன மரணசௌசமுடையவரையும் .... தீண்டினும்....சுடுகாட்டிற்போனாலும், உடுத்த வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்தல் வேண்டும்.

4. திருவிழாவிலும், யாகத்திலும், விவாகத்திலும், தீர்த்தக் கரையிலும், வீடு அக்கினிபற்றி எரியுங்காலத்திலும், கலகத்திலும், இடருற்றகாலத்திலும், நீசரல்லாத மற்றையோரைத் தீண்டினல் தீட்டில்லை.

5. ஈசுரநிந்தகர்........இழிந்த வருணத்தார் முதலாயினோரிடத்துப் பிக்ஷை வாங்கலாகாது.

6. மட்பாண்டங்களை தாழ்ந்த சாதியாரும் சமயாசாரமில்லாதவரும்...............பார்த்தாலும் தீண்டினலும் அவைகளிலே எச்சில் பட்டாலும், அவைகளைக் கழித்துவிட்டுப் புதுப்பாண்டங்கொள்ளல்வேண்டும்.

எங்கள் ஆறுமுகநாவலர் எழுதிய இவற்றையும் இன்ன பிறவற்றையும் நோக்குவோருக்கு அவர்காட்டிய சைவாசாரங்கள் நன்கு புலப்படும். இவற்றுக்கு மாறுபட்ட பிதற்றுரைகளும் அவற்றை நாவலரும் அங்கீகரித்துள்ளார் என்ற பொய் வசனங்களும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கன வல்ல.

இனி, பண்டிதர் இரத்தினம் அவர்கள் இக்காலத்திலே சைவர் அநேகர் சைவாசாரங்களைக் கைவிட்டு ஆகமவிரோதிகளாக நடக்கிறார்கள் என்பர். சதாசாரங்களை விடுத்துத் தவறாற்று நடப்பவர்களையும் ஆகமவிரோதிகளையும் தமது போதனையினால்திருத்தி அவர்களைப் பழைய வைதிகசைவநெறியில் நிறுத்துவதே அன்னாருக்குத் தலையாய கடமையாம். அதுவே தருமம். அதுவே சைவபரிபாலனம். அதனை விடுத்து மேலும் துராசாரங்களை யொழுகும்படி வற்புறுத்துதல் இன்னும் பாவத்தைச் செய்யத் தூண்டுதலாக முடியுமல்லவா.

ஒவ்வொருவரும் தத்தம் வருணத்துக்கும் நிலைக்குமுரிய ஒழுக்கமுறையாக நடந்து ஆலயவழிபாடு செய்வாராயின் நிலையாயபேற்றைப் பெறுவார்கள்; அப்படி நடவாதோர் பயன் பெற மாட்டார். காமிகாகமத்திலே எல்லாவருணத்தாரும் சுவதருமத்தை அநுட்டித்தலே சிறந்தது. அதனாலே சுகமுண்டாம். சாதி, உருவம், பலம், மேதை, கீர்த்தி, தனம் முதலியவற்றை அடைகிறார்கள் என்று விளக்குகின்றது.

---

உ

சிவமயம்.

# சாதியும் சமயமும்.

பெரியபுராணஉரை ஆசிரியர்

சிவக்கவிமணி

கோவை ஸ்ரீமத். C. K. சுப்பிரமணியமுதலியார் B. A. அவர்கள்

எழுதியது.

## சாதிப்பிரிவு.

குலம், குடி, மரபு, சாதி என்னும் பிரிவுகள் நமது நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கி வந்தன. அப்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி இருப்பும் தொழிலும் கடமையும் உரிமையும் விதிக்கப்பட்டு ஒழுக்கத்திலும் நிகழ்ந்து வந்தன. அவைகள் காரணமாக வேற்றுமைகளும் பூசல்களும் நிகழ்ந்தனவில்லை. சிறுபான்மை சரிதங்களில் கேட்கப்படும் அத்தகைய பூசல்கள் வேறுகாரணங்கள் பற்றி எழுந்தனவென்பது ஆராய்வோர்க்குப் புலனாகும். சாதிகள் ஒன்றோடொன்று நண்புடன் பிணைந்த சமூகவாழ்க்கை யுடையனவாய் நிகழ்ந்து வந்தன. இது நமது முன்னைநாள் கிராமநகரவாழ்வு. ஒருசாதி மற்றொன்றனை அழிப்பதுவோ தாழ்த்துவதுவோ இயலாத காரியம். பண்டும் இன்றும் என்றும் இவ்வாறேதான். சாதிகுலங்கட்குரிய தனித்தன்மைகள் வெவ்வேறுதான். வாழை, தென்னை, நெல் முதலிய தாவரங்களில் நூற்றுக்கணக்கான சாதிகள் உள்ளன என்பது தாவரநூலோர் கண்டவுண்மை.

> பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்.

என்ற உண்மை இக்கருத்தை விளக்குவது. இதற்கு இந்நாளில் தவறுகிய பொருள் கொண்டு பூசல் விளைக்கக் காரணம் உண்

டாக்குகின்றூர்கள். மக்கட் கூட்டத்தின் பிரிவினைகள் எப்பெய ராலேனும் எக்காரணம் பற்றியேனும் இல்லாத நாடும் தேச மும் இல்லை. சாதி குலம் பற்றிய பூசல்கள் இந்நாளில் தம்மைத் தாமே மேல் என்று கருதும் ஒரு கொள்ளைக் கூட்டத்தாரால் விளைக்கப்பட்ட விளைவுகளேயாம்.

## கன்மம்.

சாதி- ஆயுள் - போகம் என்பன கன்மத்துக்கீடாக இறை வன் தர வருவனவாம் என்பது ஞானசாத்திர உண்மை. இவை படைப்புக்காலம் தொட்டு வந்தனவாயினும்சரி, அல்லது மக் கட் சமூகவளர்ச்சியில் இடைக்காலத்தில் வந்தனவாயினும்சரி பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கிய ஒழுங்குகளை அறவே அழி க்கமுயல்வது அறிவுடைமையாகாது. அவற்றுட் புகுந்தனவாகக் காணப்படும் தீமைகளை அகற்றி ஒழுங்குபடுத்த முயல்வதே முறையாம்.

## சாதி--சமயம்.

இனி சாதியும் சமயமும் என்ற நிலைகள்பற்றிப் பார்ப்போ மாஞல் சாதியைவிடச் சமயம் சிறந்தது என்பது உண்மை தான். சாதியைவிடச் சமயமேசிறந்தது என்று ஸ்ரீ. நாவலரவர் கள் எழுதியுள்ளார்கள் என்று இந்தப் புதுக்கொள்கைக்கா ரர்கள் தங்கள் விபரீதக் கொள்கைக்கு ஆதாவு தேடுகிறூர் கள். ஆங்கிலத்தில் (The Devil quotes scripture for its purpose) என்பதொரு பழமொழி. அஃதாவது பைசாசமும் தனது கொள்கைக்கு நூல் மேற்கோள் காட்டும் என்பது.

நாவலர் மட்டுமா? 'சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறு மாதமிலி நாயேனை' என்பதுபோன்ற திருவாக்குக்க ளும் வேளாளராகிய திருநாவுக்கரசு நாயனூரும் அந்தணராகிய அப்பூதிநாயனூரும் ஒருங்கு இருந்து உடனுண்ட பெரியபுராண சரிதவரலாறு முதலியனவற்றையும் தங்கள் நவீன கொள்கைக ளுக்கு ஆதரவாக எடுத்துப் பேசுவர். இவை சாதிநிலைபெரிதா? ச யநிலை பெரிதா என்ற கேள்வி வந்தபோது சாதியைவிடச் சம மே பெரிதென்று சொல்வதேயன்றி, சாதிபேதங்கள் இல்லை யென்றூவது, அவை வேண்டாம் என்றூவது, அவற்றைத் தகர்த்

தெரிந்துவிடவேண்டும் என்றுவது, கொள்ளுதல் இவற்றின் பொருள் அல்ல. முதல்வகுப்பைவிட ஆறுவது வகுப்பு மேல் என்றால் முதல்வகுப்பு இல்லை என்றும் அல்லது அஃதிருந்தா லும் வேண்டாம் என்றும் சொல்லிவிடலாமா? சாதியையே பெரிதென்று திமிர்பிடித்துக்கொண்டு சமயத்தைத் தாழ்வாகக் குறைகூறுவாரை நோக்கியே இவை எழுந்தனவாம். "ஞாலமதில் ஞானநிட்டையுடையோருக்கு நன்மையொடு தீமையில்லை நாடுவதொன்றில்லைச், சீலமிலைத் தவமில்லை விரதமோடாச்சிரமச் செயலில்லைத் தியானமில்லைச் சித்தமலமில்லைக், கோலமிலைப் புலனில்லைக் கரணமில்லைக் குணமில்லைக் குறியில்லைக் குலமில்லைப், பாலருடனுன்மத்தர் பசாசர் குணமருவிப் பாடலினெடாடலிவை பயின்றிடினும் பயில்வர் (சித்தி 284) என்பது ஞானநூல். இதனை எடுத்து வைத்துக்கொண்டு. குலமென்பதொன்றில்லை, சீலம்- தவம்- ஆச்சிரமம்- என்பவையுமில்லை. யாவர் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். எதுவேண்டினும் செய்யலாம் என்று கூவுதல் அறிவுடைமை ஆகாது. மக்கட்படைப்பிலும் ஒவ்வோர் ஆணையும், ஒவ்வோர் பெண்ணையும் வெவ்வேறுகப் படைக்கும் கடவுட்படைப்பின் உள்ளுறை அவ்வவர் கன்மபேதமே காரணமாகும் என்பதை அறிந்து ஒழுகவேண்டாமா?

"கன்மநெறி திரிவிதநற் சாதியாயுட் போகக்
கடனதென வருமூன்று முயிரொன்றிற் கலத்தல்—
தொன்மைய தூழல்ல துணவாகா" (சிவப்—29)

என்பது ஞானமுடிபுகளுள் ஒன்றாகும்.

## சாதி வேண்டுமா?

சமய ஒழுக்க நிலையின் உறைப்புவரும் வரையில் சாதிநிலைகளும் ஒழுக்கங்களும் காப்பாற்றப்பட வேண்டுவதுதான். முன்னைது கைவந்தபோது இவை தூங்கினவன் கைப்பொருள் தானே ழுவதுபோல ஒருவனல் விடப்படுவது என்றில்லாமல், தாமே ன்றுவிடும். ஞான உறைப்புநிலை வந்தபோது சமயஒழுக்கமு அதன் முன் தாழ்ந்துவிடும் என்பதற்குப் பிரமாணம் முன் காட்டப்பட்டது.

"சைவமுதலாமளவில் சமயமும் வகுத்துமேற் சமயங்கடந்த மோனசமரசம்வகுத்த நீ" என்பர் ஸ்ரீ தாயுமானார். எனவே சாதிபேதங்களை விட்டொழித்தல் என்பதும், அவை கடவுள் கற்பனையன்றி, மனிதராற்கபிக்கப்பட்டவை என்பதும் பொருளற்ற வெறும் பேச்சுக்களாம்.

சாதி என்பது இப்பிறவியில் வந்த உடலைப்பற்றியது. சமயம் என்பது என்றும் அழியாத உயிரைப் பல பிறவிகளின் தவத்தினாற்றொடர்ந்து வருவது. அதனாலே சாதியைவிடச் சமயம்சிறந்ததுதான். ஆனால் சமயநிலையில் உள்ள தீக்கைமுதலியவை உயிரைத் தூய்மைசெய்வனவேயன்றி, அவ்வளவில் உடலைச் சுத்தியாக்கமாட்டா. உடலைப்பற்றிய சாதி முதலிய தொடக்குகள் உடலுடன்தான் ஒழியும். உடலின் நினைவு உள்ளவரையில் அவை இருந்தே தீரும்.

"அங்ஙனமாயினும், சைவத்தில் தீக்கை முதன்மையாகலின் வருணம் ஆச்சிரமம் பற்றித் தாரதம்மியம் கூறுதல் பொருந்தாதெனின்" என்றெடுத்துக்கொண்டு "தீக்கைப்பின் விதிக்கப்படும் ஆசாரங்களெல்லாம் வருணமும் ஆச்சிரமமும்பற்றியே தாரதம்மியம் ஓதுதலானும், சிவதீக்கை ஆன்மாவுக்கேயன்றி வைதிகச் சடங்குபோல உடம்பு முதலியவற்றிற்கு அன்றெனச் சித்தாந்த சாராவலி முதலியவற்றிற் கூறுதலின், அத்தீக்கையால் ஆன்மாவின் கண்ணதாகிய பசுத்துவம் நீங்கியதன்றி உடம்பின் கண்ணதாகிய சாதி நீங்காமையானும், சாதியுந் தீக்கையாற்கழியுமாயின் ஆதிசைவம், மகாசைலம், அநுசைவம், அவாந்தரசைவம் என்னும் பகுப்பு வலாமையானும், மகாசைவர்க்கு விதித்த ஆசாரம் அவாந்தரசைவராற் செய்தல் கூடாமையானும்....................வருணத்தினும் ஆச்சிரமத்தினும் தாரதம்மியம் உண்மை தெற்றென உணரப்படுமாகலின் அதனை இல்லை என்றலும் வேத வழக்கோடும் சிவாகம வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றேயாமென மறுக்க" என்று எமது மாதவச் சிவஞானமுனிவர்பெருமான் மாபாடியம்—சிறப்புப்பாயிரத்துள் ஓதுமாற்றால் உணர்க. எனவே உடல்உள்ளளவும் அல்லது உடலின்நினைவு உள்ளளவும் உடலைப்பற்றிய சாதி ஆச்சிரமம் என்பனவாதி பாகுபாடுகள் எ[illegible]வதொருவகையில் இருந்தேதீரும் என்பதும், அதனைத் தவிர்க்கலாகாதென்பதும் வெள்ளிடைமலையாய் விளங்கும்.

நந்தனர் "இன்னறரு மிழிபிறவியிது" தில்லையில் இறைவர் பால் அடைவதற்குத் தடை என்றஎண்ணம் (நினைவு). மாருமல் இருந்தபடியாலே அதனை மாற்றுவதற்குத் தீயில் மஞ்சனம் செய்து மறைமுனிவராகி நம்மிடம்வருக என்று இறைவர் ஆணை யிட்டருளினர். கண்ணப்பர் திறத்தில் தமது உடல்குலம் முதலிய நினைவுகள் ஒன்றுமில்லையாதலின், அவர் அவ்வுடலோடே இறை வர்பாற்சென்று பணிசெய்தனர். இவ்வேற்றுமை யுணராதார் பலவாறு பிதற்றியொழிவர். திருநாளைப்போவார்நாயனர் புரா ணத்திறுதியில் எனது உரையிலுள்ள குறிப்புக்களையும், அப்பூதி யார் புராணத்தில் (1823) விசேட உரைக்குறிப்புக்களையும்பார்க்க. திருநாளைப்போவார்நாயனர் புராணசூசனத்துள் "தத்தம் சாதி நெறி கடவாது சிவனை வழிபடுதல்" என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் "யாவராயினும் தங்கள் தங்கள் சாதிக்கு விதித்த விதிகடவாதுநின்று சிவனை வழிபடின் முத்திபெறுவர். அவ்விதிகடந்தோர் பயன்பெருர்" என்பதாதியாகக் கூறுவன காண்க. "மறந்து மயனினைவின்றி வருபிறப்பின் வழிவந்த வறம் புரி கோள்கையாயே யடித்தொண்டி னெறிநின்ருர்" என்ற மாபு ராணத் திருவாக்கும் கருதுக.

---

# சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால் எழுதி

அச்சிடப்பெற்ற புத்தகங்கள்.

---

| சம்ஸ்கிருதம், | | | ரூ· ச. |
|---|---|---|---|
| சிவாகமசேகரம் பிரதிட்டாவிதி | .... | விலை | 5-00 |
| பிரணயகலஹவர்ணனம் | .... | ,, | -25 |
| தமிழ் | | | |
| சிவபூசைவிளக்கம் | .... | ,, | 3-00 |
| பிராசாததீபம் .... | .... | ,, | 1-00 |
| சிவபூசைவிதி .... | .... | ,, | -75 |
| அனுட்டான அகவல் | .... | ,, | -25 |
| விநாயகபரத்துவம் .... | .... | ,, | -75 |
| புவனேசுவரி மகத்துவம் | .... | ,, | -25 |
| சைவப்பிரகாசிகை 5-ம் புத்தகம் | .... | ,, | 1-00 |
| ,, 4-ம் ,, | .... | ,, | -75 |
| ,, 3-ம் ,, | .... | ,, | -60 |
| ,, 2-ம் ,, | .... | ,, | -50 |
| ,, 1-ம் ,, | .... | ,, | -40 |

வேண்டியவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

ச. கு. வைத்தீசுவரக்குருக்கள்,
அச்சுவேலி P. O·
சிலோன்.